சூத்திரம். | பெயர்ப்பிரிவு.

(௨௫)

தொடையல்வாசிகை சிகழிகைகோதை,படலையலங்கல்கத்திகைபிணைய,லணியல்சுருக்கைதொடலைதாமந், தொங்கற்றெரியல்கண்ணிதார்சூட்டு, மஞ்சரியொலியலிலம்பகமாலை.

மாலையின்பெயர்.
தொடையல்-வாசிகை-சிகழிகை-கோதை-படலை-அலங்கல்-கத்திகை-பிணையல்-அணியல்-சுருக்கை-தொடலை-தாமம்-தொங்கல்-தெரியல்-கண்ணி-தார்-சூட்டு-மஞ்சரி-ஒலியல்-இலம்பகம். ஆ ௨௰.

(௨௬) சூ.

*பிணையல்பின்னியமாலைப் பெயரே.

பின்னியமாலையின்பெயர்.
பிணையல். (௧)

(௨௭) சூ.

சூட்டுடனிலம் பகநுதலணிமாலை.

நுதலணிமாலையின்பெயர்.
சூட்டு-இலம்பகம். ஆ ௨.

(௨௮) சூ.

மாலைசிகழிகைவாசிகைதொடைய, லாகுமென்பவறிந்திசினோரே.

வாசிகையின்பெயர்.
மாலை-சிகழிகை-தொடையல். ஆ ௩.

நாடேபிறர் நாட்டிற்குவமையாறே, காலமறிந்துதவுங்
காவிரிதானே,பாடவர்திலகனம்பன்மன்ன,னீடிசைத்தலை
வனருவந்தைச்சேந்த, னாய்ந்ததிவாகரத் தரும்பொருள்
விளக்கு, நான்காவதுமரப்பெயர்த்தொகுதி
முற்றிற்று.



ஐந்தாவது

# இடப்பெயர்த்தொகுதி.

சூத்திரம். | பெயர்ப்பிரிவு.

(௧)

*அமுதங்கேவலமபவருக்கம் வீடு, சிவங்கைவல்லியஞ் சித்தி மீளாக்கதி,பரகதியோடுமுத்தி பஞ்சமகதி, நிர்வாண மோக்கமெனநிகழ்த்தினரே.

மோக்கத்தின்பெயர்.
அமுதம்-கேவலம்-அபவருக்கம்-வீடு-சிவம்-கைவல்லியம்-சித்தி-மீளாக்கதி-பரகதி-முத்தி-பஞ்சமகதி-நிர்வாணம். ஆ ௧௨.

(௨) சூ

தாநந்துறக்கம் பொன்னுலகும்பர்,வானகமமருலகுயர் நிலைபுத்தேள்,வியனுலகுவிசும்பு விண்ணுலகுநாகம், பவநமாசுவர்க்கந்தெய்வலோகப்பெயரே.

தெய்வலோகத்தின்பெயர்.
தாநம்-துறக்கம்-பொன்னுலகு-உம்பர்-வானகம்-அமருலகு-உயர்நிலை-புத்தேளுலகு-விசும்பு-விண்ணுலகு-நாகம்-பவநம்-சுவர்க்கம். ஆ ௧௩.

(௩) சூ.

*பவநநாகலோகப்பாலதாம்.

நாகலோகத்தின்பெயர்.
பவநம். (௧).

(௪) சூ.

சேணியுஞ்சேடியும்விஞ்சையர்சேர்விடம்.

விஞ்சையருலகத்தின்பெயர்.
சேணி-சேடி. ஆ ௨.

(௫) சூ.

மாதிரமாசைவம்பறிசைப் பெயர்.

திசையின்பெயர்.
மாதிரம்-ஆசை-வம்பல். [௩.

(௬) சூ.

ககுபமிசைபுலந்தேந்திக்கரிதம், விசும்புமுலகுங் கோக்காட்டையுமாம்.

மற்றுந்திசையின்பெயர்.
ககுபம்-மிசை-புலம்-தேம்-திக்கு-அரிதம்-விசும்பு-உலகு-கோ-காட்டை. ௰
ஆ ௰௩.

(௭) சூ.

குணக்கேபூருவமிந்திரிபிராசி,கிழக்குக்கீழ்த்திசை கிளக்குங்காலே.

கீழ்த்திசையின்பெயர்.
குணக்கு-பூருவம்-இந்திரி-பிராசி-கிழக்கு. ஆ ௫.

சூத்திரம்.

(அ)

அவாசிதக்கணம்யாமியந்தெ
க்குச், சிவேதைமற்றிவைதெற்
கெனலாகும்.

(கூ) சூ.

மேக்குப் பச்சி மங்குடக் கி
வைமேற்கே.

(ய) சூ.

வாருணம் பிரத்தியக்கு மறு
வே.

(கக) சூ.

உதக்கேயுதீசியுத்தர மென்
ன,வடக்கின்பெயரிவைவைக்கு
ங்காலே.

(கஉ) சூ.

அவநிகாசிநிமேதிநி யளக்க
ர்; தரணிதாரணி தராதலங்குவ
லயம், புடவி பூதலந் தரைபடி
ஞாலம், வையமகிலங் குமண்பு
விபார் + நா,டுலகுபுவநிபாரியு
கநேமி, யகலிடம்பொறையர
ண் மண்டிலம் பூத்திணை, தலம்
பொழில் பிருதிவிவேலாவலய,
நிலஞ்சகந்தாலம்பூமியென நிக
ழ்த்தினர்.

(கங) சூ.

நிரயந்துருக்கம்பாதாளங்கும்
பி,யள்ளலளறேயருஞ் சிறையி
ருணில,மெரியுந்திமிரமுமிரௌ
ரவுமென்றிவை, நரகின் பெய
ரெனநவிலப்படுமே.

பு

பெயர்ப்பிரிவு.

தெற்கின்பெயர்.

அவாசி - தக்கணம் - யாமிய
ம்-தெக்கு-சிவேதை. ஆ. ரு.

மேற்கின்பெயர்.

மேக்கு-பச்சிமம்-குடக்கு. ங.

மற்றுமேற்கின்பெயர்.

வாருணம்-பிரத்தியக்கு. உ.

---

ஆ. ரு.

வடக்கின்பெயர்.

உதக்கு-உதீசி-உத்தரம்.

ஆ. ங.

பூமியின்பெயர்.

அவநி-காசிநி-மேதிநி - அளக்
கர்-தரணி-தாரணி-தராதலம்-
குவலயம்-புடவி - பூதலம் - த
ரை-படி-ஞாலம்-வையம்-அகி
லம்-கு-மண்-புவி-பார்-நாடு-
உலகு-புவநி-பாரி-யுகம்- நே
மி-அகலிடம் - பொறை - அர
ண்-மண்டிலம்-பூ- திணை - தல
ம்-பொழில்-பிருதிவி - வேலா
வலயம்-நிலம்-சகம்-தாலம்.

ஆ. ங அ.

நரகத்தின்பெயர்.

நிரயம்-துருக்கம்- பாதாள
ம்-கும்பி-அள்ளல்-அளறு- அ
ருஞ்சிறை-இருணிலம்-எரி-தி
மிரம் - இரௌரவம். ஆ. யக.

கபு



(கச) சூ.

புவநநாடு பொழிறலம் புட
வி,புவநமுலகின் பொதுப்பெ
யர்ப்பால.

(கரு) சூ.

பைதிர மண்டிலம் பாண்டி
றேயந், தண்ணடைசநபத மக
லுள் சும்மை, கண்டமேணியுல
கென்றிவைநாடே.

(கசா) சூ.

விலங்கலடுக்கல்வெற்புப்ப
ருப்பதஞ்,சிலம்புநாகங்குறும்
பொறை சிகரம், வேதண்டம்
வேரங்கிரிதிகிரிசையம், தரணி
பூதரமோங்கல்பிறங்கல்,குவடு
குன்றோதிப்றம்புவரைவிண்டு,
போதி கோச்சிலையிறும்பு தட
மாதிரம்,பொச்சை நவிர்கல்லக
ம்பொருப்புநகமசலஞ்,சாரல்
சிலோச்சயஞ் சைலமலையென்
[ப.

(கள) சூ.

பொன்மலைமேரு.

(கஅ) சூ.

*வெண்மலைவேதண்டம்விச
யார்த்தம்வெள்ளிமலை.

(கக) சூ.

பொதியமலைமலயம்.

(உய) சூ.

வல்லியம்பொருப்பே கொ
ல்லிமலையாகும்.

இ

உலகின்பொதுப்பெயர்.

புவநம்-நாடு-பொழில்-தல
ம்-புடவி-புவநம். ஆ. சா.

நாட்டின்பெயர்.

பைதிரம்-மண்டிலம்-பாண்
டில்-தேயம்- தண்ணடை - சந
பதம்-அகலுள்-சும்மை-கண்ட
ம்-ஏணி-உலகு. ஆ. யக.

மலையின்பெயர்.

விலங்கல்- அடுக்கல் - வெற்
பு-பருப்பதம்- சிலம்பு - நாக
ம்-குறும்பொறை-சிகரம்-வே
தண்டம்-வேரம்-கிரி-திகிரி-சை
யம்-தரணி-பூதரம்-ஓங்கல்-பி
றங்கல்-குவடு-குன்று-ஓதி-பற
ம்பு- வரை - விண்டு - போதி-
கோ- சிலை-இறும்பு-தடம்-மா
திரம்-பொச்சை-நவிர்-கல்லக
ம்-பொருப்பு-நகம்- அசலம்-
சாரல்-சிலோச்சயம்-சைலம்.

ஆ. ங அ.

மேருவின்பெயர்.

பொன்மலை. (க)

வெள்ளிமலையின்பெயர்.

வெண்மலை-வேதண்டம்-வி
சயார்த்தம். ஆ. ங.

பொதியமலையின்பெயர்.

மலயம். (க)

கொல்லிமலையின்பெயர்.

வல்லியம்பொருப்பு. (க)

இ

+ தாடுநடுவெனவும்பாடம்.

(௨௧) சூ.
இறும்பு பொச்சை குவடுப
தலை, பிறங்கல்பொற்றைகுறும்
பொறைகுன்றே.

(௨௨) சூ.
கோடுகொடுமுடிகுவடுசிகர
ம், சிமையமைந்து மலையினுச்சி.

(௨௩) சூ.
வாரமுந்தடமுஞ் சாரலு ம
லைப்பக்கம்.

(௨௪) சூ.
அறையேபாறை.

(௨௫) சூ.
பொறையே துறுகல்.

(௨௬) சூ.
முடுக்கர்கந்தர மலைமுழை
யென்ப.

(௨௭) சூ.
பிலமேகீழறை.

(௨௮) சூ.
* நிகுஞ்சங்குகையாம்.

(௨௯) சூ.
கண்டறைகற்புழை.

(௩௰) சூ.
* கற்பாழிகாண்டையுங் கரு
துவர தற்கே.

(௩௧) சூ.
சிலையேகல்லே.

(௩௨) சூ.
உலமேதிரள்கல்.

(௩௩) சூ.
நுழையுஞ்சுருங்கையு நுழை
வாயிலாகும்.

குன்றின்பெயர்.
இறும்பு-பொச்சை-குவடு-
பதலை-பிறங்கல்-பொற்றை-
குறும்பொறை. ஆ. ௭.

மலையுச்சியின்பெயர்.
கோடு-கொடுமுடி-குவடு-
சிகரம்-சிமையம். ஆ. ௫.

மலைப்பக்கத்தின்பெயர்.
வாரம்-தடம்-சாரல்.
ஆ. ௩.

பாறையின்பெயர்.
அறை. (௧)

துறுகல்லின்பெயர்.
பொறை. (௧)

மலைமுழையின்பெயர்.
முடுக்கர்-கந்தரம். ஆ. ௨.

கீழறையின்பெயர்.
பிலம். (௧)

குகையின்பெயர்.
நிகுஞ்சம். (௧)

கற்புழையின்பெயர்.
கண்டறை. (௧)

மற்றுங்கற்புழையின்பெயர்.
கற்பாழி-காண்டை. ஆ. ௨.
ஆ. ௩.

கல்லின்பெயர்.
சிலை. (௧)

திரள்கல்லின்பெயர்.
உலம். (௧)

நுழைவாயிலின்பெயர்.
நுழை-சுருங்கை. ஆ. ௨.







(௩௪) சூ.
விடர்மலைப் பிளப்பென வி
ளம்பினர்புலவர்.

(௩௫) சூ.
விடருங்கமரும் வெடிப்பின்
பெயரே.

(௩௬) சூ.
திட்டைதிடரே.

(௩௭) சூ.
பதுக்கைசிறுதிட்டை.

(௩௮) சூ.
பரலடுத்துயர் நில முரம்பெ
னப்படுமே.

(௩௯) சூ.
திட்டைதிடறு சுவல் வல்லை வ
ன்பான், மெட்டுத்திடர்படர்கு
ப்பைகுவால்குவை, யொட்டிய
பதினொன்று மேடென வுரை
ப்பர்.

(௪௰) சூ.
ஆம்பிலம்பாதலம்பாதாள
ப்பெயரே.

(௪௧) சூ.
அத்திபௌவமளக்கரார்க
லி, யாழிபெருநீரம்பரமுந்நீ, ரு
ப்புவீரைசக்கரஞ் சாகரம், வே
லைவெள்ள மகராலயநேமி, சல
நிதிவாரிசலதியலையே, பாராவா
ரமுததிசமுத்திரம், பரவையுவ
ர்நரலைபுணரிவாரிதி, வேலாவல
யங்கார்கோ ளோதம், வாருண
ஞ்சிந்து வாரமம்புராசி, கார்ம
லி

மலைப்பிளப்பின்பெயர்.
விடர். (௧)

வெடிப்பின்பெயர்.
விடர்-கமர். ஆ. ௨.

திடரின்பெயர்.
திட்டை. (௧)

சிறுதிட்டையின்பெயர்.
பதுக்கை. (௧)

பரலடுத்துயர்நிலத்தின்பெயர்.
முரம்பு. (௧)

மேட்டின்பெயர்.
திட்டை-திடறு-சுவல்-வல்
லை-வன்பால்-மெட்டு-திடர்-ப
டர்-குப்பை-குவால்-குவை.
ஆ. ௰௧.

பாதாளத்தின்பெயர்.
ஆம்பிலம்-பாதலம். ஆ. ௨.

கடலின்பெயர்.
அத்தி-பௌவம்-அளக்கர்-
ஆர்கலி-ஆழி-பெருநீர்-அம்
பரம்-முந்நீர்-உப்பு-வீரை-ச
க்கரம்-சாகரம்-வேலை-வெள்ள
ம்-மகராலயம்-நேமி-சலநிதி-
வாரி-சலதி-அலை-பாராவாரம்-
உததி-சமுத்திரம்-பரவை-உ
வர்-நரலை-புணரி-வாரிதி-வே
லாவலயம்-கார்கோள்-ஓதம்-
வா

வியுவரிகடலெனக்கருதுவர்.

(௪௨) சூ.

ஓதமும்புணரியுங்கடற்றிரை யாகும்.

(௪௩) சூ.

சீகரந்தரங்கமறல்கல்லோல, மலைபுனற்றிரைக்கு வரும்பொதுப்பெயரே.

(௪௪) சூ.

வேலையும்பாராவாரமுங்கடற்கரை.

(௪௫) சூ.

தீரம்பாரம் வரையணைகோடு, கூலம் வாரம்புனற்கரைப் பொதுப்பெயர்.

(௪௬) சூ.

குலையுஞ் சேதுவுங்குரம்புஞ்செய்கரை.

(௪௭) சூ.

அருவிமலைச்சாரல்வரும்யாறாகும்.

(௪௮) சூ.

கலுழியுமுயவையுமுல்லைக்கான்யாறு.

(௪௯) சூ.

உந்திநதி துறைவருபுனல்குடினை,சிந்துவோடொலியலாறெனச்செப்புவர்.

(௫௰) சூ.

கானன்மூரம்புகாயன்முகங்கழி.



வாருணம்-சிந்து-வாரம்-அம்புராசி-உவரி. ஆ௩௬.

கடற்றிரையின்பெயர்.

ஓதம்-புணரி. ஆ௨.

புனற்றிரைப்பொதுப்பெயர்.

சீகரம்-தரங்கம்-அறல்-கல்லோலம்-அலை. ஆ௫.

கடற்கரையின்பெயர்.

வேலை-பாராவாரம். ஆ௨.

புனற்கரைப் பொதுப்பெயர்.

தீரம்-பாரம்-வரை-அணை-கோடு-கூலம்-வாரம். ஆ௭.

செய்கரையின்பெயர்.

குலை-சேது-குரம்பு. ஆ௩.

மலைச்சாரல்வரும்யாற்றின் பெயர்.

அருவி. (௧)

முல்லைக்கான்யாற்றின் பெயர்.

கலுழி-உயவை. ஆ௨.

ஆற்றின்பொதுப்பெயர்.

உந்தி-நதி-துறை-வருபுனல்-குடினை-சிந்து-ஒலியல். ஆ௭.

கழியின்பெயர்.

கானல்-மூரம்பு-காயல்-முகம். ஆ௪.





சூத்திரம்.

(௫௧) ———

அதோமுகம் புகாரோடழிவில்கூடல், கழிமுகமென்று கருதல்வேண்டும்.

(௫௨) சூ.

உப்பளங்காயலுவளகமளக்கர்.

(௫௩) சூ.

பொன்னிகாவிரி.

(௫௪) சூ.

பொருநைதண்பொருந்தம்

(௫௫) சூ.

குமரிகந்நியாகக்கூறுவர்.

(௫௬) சூ.

வேகவதியேவையையாகும்.

(௫௭) சூ.

ஆனிவானியான்பொருந்தமாகும்.

(௫௮) சூ.

* கோதைகௌதமையாகக்கொள்வர்.

(௫௯) சூ.

* விருத்தகங்கைவிமலைகோதாவிரி.

(௬௰) சூ.

* பாவிசீரநதிபால்யாறாகும்

(௬௧) சூ.

அலந்தைபண்ணைகோட்டகங்கிடங்கோ, டிலஞ்சிதாங்கல்சுனையேல்லையோடை, வட்டந்தடாக மடுக்குளம்வலயங், குட்டங்குண்டம்பட்டஞ்சூழி, பொய்கைகேணியாவிதடம்படுகரேரிகயம்பயமுவளகம்வாவி.



பெயர்ப்பிரிவு.

கழிமுகத்தின்பெயர்.

அதோமுகம்-புகார்-கூடல். ஆ௩.

உப்பளத்தின்பெயர்.

காயல்-உவளகம்-அளக்கர். ஆ௩.

காவிரியின்பெயர்.

பொன்னி. (௧)

பொருநையின்பெயர்.

தண்பொருந்தம். (௧)

கந்நியின்பெயர்.

குமரி. (௧)

வையையின்பெயர்.

வேகவதி. (௧)

ஆன்பொருந்தநதியின்பெயர்.

ஆனி-வானி. ஆ௨.

கௌதமைநதியின்பெயர்

கோதை. (௧)

கோதாவிரியின்பெயர்.

விருத்தகங்கை-விமலை. ஆ௨.

பால்யாற்றின்பெயர்.

பாவி-சீரநதி. ஆ௨.

வாவியின்பெயர்.

அலந்தை-பண்ணை-கோட்டகம்-கிடங்கு-இலஞ்சி-தாங்கல்-சுனை-எல்லை-ஓடை-வட்டம்-தடாகம்-மடு-குளம்-வலயம்-குட்டம்-குண்டம்-பட்டம்-சூழி-பொய்கை-கேணி-ஆவி-தடம்-படுகர்-ஏரி-கயம்-பயம்-உவளகம். ஆ௨௭.

சூத்திரம்.

(௬௨)

இலவந்திகையேயெந்திராவா [வி.

(௬௩) சூ.

இலங்கையுந் துருத்தியு மெ ன்வரும்பெயரோ, டரங்கமு மாற்றிடைக்குறையெனவறைவ [ர்.

(௬௪) சூ.

ஊருணும்பொதுநீருருணி யாகும்.

(௬௫) சூ.

கூவலுமசும்புங் கூபமுங்கு ழியும், பூவலுங்கேணியுந் தா வுங்கிணறே.

(௬௬) சூ.

அஃகுமுறவியுமசும்புமூற [ல்.

(௬௭) சூ.

புற்புதமொக்குள்பௌவநீர்க்குமிழி.

(௬௮) சூ.

நுரையேபேநமாகுமென் [ப.

(௬௯) சூ.

அழுந்துங்குண்டுங்கயமுமா [ழம்.

(௭௰) சூ.

வழாறும்பிராறும் வாரியுநி றைபுனல்.

(௭௧) சூ.

அகாதமென்பது நீந்துபுன லாகும்.

பெயர்ப்பிரிவு.

எந்திராவாவியின்பெயர்.

இலவந்திகை. (௧)

யாற்றிடைக்குறையின் பெயர்.

இலங்கை- துருத்தி- அரங்கம். ஆ ௩.

ஊருணுநீர்ப்பெயர்.

ஊருணி. (௧)

கிணற்றின்பெயர்.

கூவல்-அசும்பு-கூபம்-குழி -பூவல்-கேணி- தாவு. ஆ ௭.

ஊறலின்பெயர்.

அஃகு-உறவி-அசும்பு- ஆ ௩.

நீர்க்குமிழியின்பெயர்.

புற்புதம்-மொக்குள்-பௌவம். ஆ ௩.

நுரையின்பெயர்.

பேநம். (௧)

ஆழத்தின்பெயர்.

அழுந்து-குண்டு-கயம்- ஆ ௩.

நிறைபுனலின்பெயர்.

வழாறு-பிராறு-வாரி. ஆ ௩.

நீந்துபுனலின்பெயர்.

அகாதம். (௧)

கொ-



சூத்திரம்.

(௭௨)

கோலமென்பது கொழுந் துநீரோட்டம்.

(௭௩) சூ.

சற்சலமென்பதுதெளிநீரா [கும்.

(௭௪) சூ.

விலங்கல்கலுழிகலங்கற்புன [லே.

(௭௫) சூ.

அள்ளல்சேறுட்கரளறு, கொள்ளமளறுகுழம்புகாலாழ், தொள்ளிபங்கம்பூழிகுழைசே றே.

(௭௬) சூ.

தொய்யிறொளியேசெதும் புசேதகஞ்,செய்யலென்றிவை சேறெனத்தகுமே.

(௭௭) சூ.

அருப்பமசடமழுவம் வழுக் குநிலம்.

(௭௮) சூ.

அசும்புமயசுமசுபாகந்தன் னுட, னங்கணமுஞ் சகதியும் பொல்லாநிலமே.

(௭௯) சூ.

வாலுகம்வெண்மணல்.

(௮௰) சூ.

புளிநமணற்குன்றே.

(௮௧) சூ

அதரயிர் நுண்மணல்.

(௮௨) சூ.

பொடிபூழ்திபுழுதியாகுமெ ன்ப.]

அ

பெயர்ப்பிரிவு.

கொழுந்துநீரோட்டத்தின் பெயர்.

கோலம். (௧)

தெளிநீரின்பெயர்.

சற்சலம். (௧)

கலங்கற்புனலின்பெயர்.

விலங்கல்-கலுழி. ஆ ௨.

சேற்றின்பெயர்.

அள்ளல்-அசறு - அளக்கர்- அருறு-கொள்ளம்- அளறு-குழம்பு-காலாழ்- தொள்ளி-பங்கம்-பூழி-குழை. ஆ ௰௨.

மற்றுஞ்சேற்றின்பெயர்.

தொய்யில் - தொளி-செதும்பு-சேதகம்- செய்யல் ௫.

ஆ ௰௭.

வழுக்குநிலத்தின்பெயர்.

அருப்பம்-அசடம்- அழுவம். ஆ ௩.

பொல்லாநிலத்தின்பெயர்.

அசும்பு-அயசு-அசுபாகம்- அங்கணம்-சகதி. ஆ ௫.

வெண்மணலின்பெயர்.

வாலுகம். (௧)

மணற்குன்றின்பெயர்.

புளிநம். (௧)

நுண்மணலின்பெயர்.

அதர்-அயிர். ஆ ௨.

புழுதியின்பெயர்.

பொடி-பூழ்தி- ஆ ௨.

அ

சூத்திரம்.

(அரு) ———

அறலேயலைநண்கருமணலா
[கும்

(அசு) சூ.

மலைச்சார்புகுறிஞ்சிநிலம்.

(அஎ) சூ.

கடற்சார்புநெய்தனிலம்.

(அஅ) சூ.

காடுசார்நிலமுல்லை.

(அஎ) சூ.

நாடுசார்நிலமருதம்

(அஅ) சூ.

நீரின்றிவேனிற்றெறுநிலம் பாலை.

(அகூ) சூ.

அகணிபணைபண்ணைபழனங் கழனி,பானல் கம்பலைபடுகர் வயன்மருதம்.

(கூ0) சூ.

புறவம்புறம்பணைமுல்லைநிலப்பெயர்.

(கூக) சூ.

அறைவர் குறிஞ்சிக் குமப் பெயர்தானே.

(கூஉ) சூ.

வன்பால்குறிஞ்சியும்பாலையுமாகும்.

(கூரு) சூ.

மென்பா லென்பதுமருதமேற்றே.

(கூச) சூ.

முல்லையுநெய்தலுமொழிசமப்பாலே.

பெயர்ப்பிரிவு.

அலைகொழித்தகருநண்மணலின்பெயர்.

அறல். ஆ க.

குறிஞ்சியென்பது.

மலைச்சார்புநிலம். (க)

நெய்தலென்பது.

கடற்சார்புநிலம். (க)

முல்லையென்பது.

காடுசார்நிலம். (க)

மருதமென்பது.

நாடுசார்நிலம். (க)

பாலையென்பது.

நீரினறிவெப்புறுநிலம். (க)

மருதநிலத்தின்பெயர்.

அகணி-பணை-பண்ணை-பழனம்-கழனி-பானல்-கம்பலை-படுகர்-வயல். ஆ கூ.

முல்லைநிலத்தின்பெயர்.

புறவம்-புறம்பணை. ஆ உ.

குறிஞ்சிநிலத்தின்பெயர்

புறவம்-புறம்பணை. ஆ உ.

வன்பாலெனும்பெயர்.

குறிஞ்சிக்கும்-பாலைக்குமாம்.

மென்பாலெனும்பெயர்.

மருதத்திற்காம்.

சமப்பாலெனும்பெயர்.

முல்லைக்கும்-நெய்தற்குமா
[ம்.





சூத்திரம்.

(கூரு) ———

மலையினீரில்வநத்தில்வந்தமற்,றிணையமிகுதிச்சொற்கருநிலப்பெயரே.

(கூசு) சூ.

அழுவந்துருக்கமாகுமென்
[ப.

(கூஎ) சூ.

பாக்கம்பட்டினம்பதிநகர் சும்மை,பூக்கஞ்சேரிபுரமுட்டம்பூண்டி, யகரங்குடியே குறிச்சிகோசர,மகலுளொச்சியிருக்கைவேலி, குப்பம்பாடிகுறும்புபாழி, சிறுகுடிதண்ணடையுறையுளெயிலொடு,வாழ்க்கையுட்படுத் திருபத்தேழு, நாடிலூரொனநவின் றிசினோரே.

(கூஅ) சூ.

சூரந்தநீரும்வயலுஞ்சூழ்ந்தவூர் , கிராமமாகக்கிளக்கப்படுமே.

(கூகூ) சூ.

குடியைஞ்ஞூறுகுறைவறநிறைந்தது,பெருங்கிராமமெனப்பேசப்படுமே.

(௱) சூ.

கிரியலகுழவடுத்தவூர்,கேடகம்.

(௱க) சூ.

மலையுமாறுமடுத்தவூர்கர்வடம்.

பெயர்ப்பிரிவு.

கருநிலமென்பது.

மலையினு நீரினும் வநத்தினு மிகுதிநிலம்.

துருக்கத்தின்பெயர்.

அழுவம். (க)

ஊரின்பெயர்.

பாக்கம்-பட்டினம்-பதி-நகர்-சும்மை-பூக்கம்-சேரி-புரம்-முட்டம்-பூண்டி-அகரம்-குடி-குறிச்சி-கோசரம்-அகலுள்-நொச்சி-இருக்கை-வேலி-குப்பம். பாடி-குறும்பு-பாழி-சிறுகுடி. தண்ணடை. உறையுள்-எயில்-வாழ்க்கை. ஆ உஎ

நீரும்வயலுஞ்சூழ்ந்தவூரின்
பெயர்.

கிராமம். (க)

ஐஞ்ஞூறுகுடிநிறைந்தவூரின்பெயர்.

பெருங்கிராமம். (க)

மலைசூழ்ந்தவூரின்பெயர்

கேடகம். (க)

மலையுமாறுஞ்சூழ்ந்தவூரின்பெயர்.

கர்வடம். (க)

சூத்திரம்.

(௱௨) ———

பண்டம்பலகொடுபகருங்கடற்கரை, மன்னும்பதியேபட்டினமாகும்.

(௱௩) சூ.

பட்டுநொச்சியும்பள்ளியுஞ்சிற்றூர்.

(௱௪) சூ.

குறிச்சிசிறூர்குறிஞ்சிநிலத்[தூர்.

(௱௫) சூ.

பாடிமுல்லைப்பதி.

(௱௬) சூ.

பட்டினநெய்தற்பதி.

(௱௭) சூ.

முனையிடங்குறம்புமுதுபாலைநிலத்தூர்.

(௱௮) சூ.

பூக்கங்குடிக்காடுபூரியமுறையுள்,பாக்கமருப்பமகலுள்பதியே,கோட்டம்வசதிதாவளநியமம், வாழ்க்கைதண்ணடைமருதநிலத்தூர்ப்பெயர்.

(௱௯) சூ.

பாடியும்புரமுநகரப்பதி[யே.

(௱௰) சூ.

சூழ்கழியிருக்கைகோணமுக[மே.

(௱௧௧) சூ.

மருங்கிலூர்சூழ் பெரும்பதிமடப்பம்.

கொ

பெயர்ப்பிரிவு.

பலபண்டம்பகருங் கடற்கரையூரின்பெயர்.

பட்டினம். (௧)

சிற்றூரின்பெயர்.

பட்டு-நொச்சி-பள்ளி. ஆ௩.

குறிஞ்சிநிலத்தூரின்பெயர்.

குறிச்சி-சிறூர். ஆ௨.

முல்லைநிலத்தூரின்பெயர்.

பாடி. (௧)

நெய்தனிலத்தூரின்பெயர்.

பட்டினம். (௧)

பாலைநிலத்தூரின்பெயர்.

முனையிடம்-குறும்பு. ஆ௨.

மருதநிலத்தூரின்பெயர்.

பூக்கம்-குடிக்காடு-பூரியம்-உறையுள்-பாக்கம்-அருப்பம்-அகலுள்-பதி-கோட்டம்-வசதி-தாவளம்-நியமம்-வாழ்க்கை-தண்ணடை. ஆ௰௪.

நகரப்பதியின்பெயர்.

பாடி-புரம். ஆ௨.

சூழ்கழியிருக்கையின்பெயர்.

கோணமுகம். (௧)

மருங்கிலூர்சூழ்பெரும்பதியின்பெயர்.

மடப்பம். (௧)

கொ



சூத்திரம்.

(௱௰௨) சூ.

கொடுங்குறும்பரணிருக்கைகுறும்பென்றாகும்.

(௱௧௩) சூ.

பாசறைமுனைமேற் சென்றோருறைபதி.

(௱௧௪) சூ.

கோழியுறையூர்.

(௱௧௫) சூ.

கூடன்மதுரை.

(௱௧௬) சூ.

*மன்றஞ்சிதம்பரம்.

(௱௧௭) சூ.

*கமலைதிருவாரூர்.

(௱௧௮) சூ.

கருவூர்வஞ்சி.

(௱௰௯) சூ.

காகநதிபுகார்காவிரிப்பூம்பட்டினம்.

(௱௨௰) சூ.

உஞ்சையவந்தி.

(௱௨௧) சூ.

காசிவாரணசி.

(௱௨௨) சூ.

கச்சிகாஞ்சி.

(௱௨௩) சூ.

விதேகை யென்பது மிதிலையாகும்.

(௱௨௪) சூ.

விநிதைசாகேதங்கோசலையயோத்தி.

ப

பெயர்ப்பிரிவு.

கொடுங்குறும்பரணிருக்கையின்பெயர்.

குறும்பு. (௧)

முனைமேற்சென்றோருறைபதியின்பெயர்.

பாசறை. (௧)

உறையூரின்பெயர்.

கோழி. (௧)

மதுரையின்பெயர்.

கூடல். (௧)

சிதம்பரத்தின்பெயர்.

மன்றம். (௧)

திருவாரூரின்பெயர்.

கமலை. (௧)

கருவூரின்பெயர்

வஞ்சி. (௧)

காவிரிப்பூம்பட்டினத்தின்பெயர்.

காகநதி-புகார். ஆ௨.

அவந்தியின்பெயர்.

உஞ்சை. (௧)

காசியின்பெயர்.

வாரணசி. (௧)

காஞ்சியின்பெயர்

கச்சி. (௧)

மிதிலையின்பெயர்.

விதேகை. (௧)

அயோத்தியின்பெயர்.

விநிதை-சாகேதம்-கோசலை.. ஆ௩.

ப

சூத்திரம்.

(௱௨௫) ———

புரியென்கிளவிபுரமென்று
[ரும்.

(௱௨௬) சூ.

பாடியென்பது சேரியாகு
[ம்.

(௱௨௭) சூ.

*காழகங்கடாரமாகக்கருது
[வர்.

(௱௨௮) சூ.

*சிங்களமீழமாகச்செப்புவர்

(௱௨௯) சூ.

*நெல் லும்புல் லு நிறைந்தமத்தகம், புல் லுமலையூர் சம்வாகமாகும்.

(௱௩௰) சூ.

*அரித்துவாரமாயாபுரியாம்.

(௱௩௧) சூ.

கூலமங்காடிகடையாகக்கூறுவர்.

(௱௩௨) சூ.

ஆவண நியம மாக லு முரித்
[தே.

(௱௩௩) சூ.

ஆவணம்வீதிஞெள்ளன்மறுகு, கோசநியமமார்க்கந்தெரு
[வே.

(௱௩௪) சூ.

சிறகெனவொருவழிச்செப்பவும்படுமே.

(௱௩௫) சூ

மன்றமார்க்க நியம நெடுந்தெருவே.

சூ

பெயர்ப்பிரிவு.

புரியெனும்பெயர்.

புரத்திற்குரித்து. (௧)

பாடியெனும்பெயர்.

சேரிக்குரித்து. (௧)

கடாரத்தின்பெயர்.

காழகம். (௧)

சிங்களத்தின்பெயர்.

ஈழம். (௧)

நெல் லும்புல் லு நிறைந்த மலையூரின்பெயர்.

சம்வாகம். (௧)

அரித்துவாரத்தின்பெயர்.

மாயாபுரி. (௧)

கடையின்பெயர்.

கூலம்-அங்காடி. ௨.

மற்றுங்கடையின்பெயர்.

ஆவணம்-நியமம். ௨.

ஆ ௪.

தெருவின்பெயர்.

ஆவணம்-வீதி-ஞெள்ளல்-மறுகு-கோசம்-நியமம்-மார்க்கம். ௭.

மற்றுந்தெருவின்பெயர்.

சிறகு. (௧)

ஆ ௮

நெடுந்தெருவின்பெயர்.

மன்றம்-மார்க்கம்-நியமம்.

ஆ ௩.

கு



சூத்திரம்.

(௱௩௬) ———

குறுந்தெருமறுகே.

(௱௩௭) சூ.

செண்டுவெளிவையாளிவீதி, பாவிவட்டந்திருமுற்றமாகும்.

(௱௩௮) சூ.

பூரியம்வேந்தர்வீதியாகும்.

(௱௩௯) சூ.

கோணமுடுக்குத்தெருவாகும்மே.

(௱௪௰) சூ.

அந்திமுச்சந்தி.

(௱௪௧) சூ.

அந்திகவலைவரியேசந்தி.

(௱௪௨) சூ.

முந்தையோர்சதுக்கநாற்சந்தியென்ப.

(௱௪௩) சூ.

சேடியும்வாடையுஞ்சிறோணியாகும்.

(௱௪௪) சூ.

ஆவிடமெனவுமறையப்படுமே.

(௱௪௫) சூ.

ஆவேசநமக்கசாலையர்வீதி.

(௱௪௬) சூ.

பக்கணம் வேடர் வீதியாகு
[ம்.

(௱௪௭) சூ.

*சந்துசதுக்கம்.

(௱௪௮) சூ.

சிநகரஞ்சேதிமந்தேவாலய, நிலயம்பாழிபள்ளிநிகேதந,

ம

பெயர்ப்பிரிவு.

குறுந்தெருவின்பெயர்.

மறுகு. (௧)

குதிரைவையாளிவீதியின் பெயர்.

செண்டுவெளி-பாவிவட்டம்-திருமுற்றம். ஆ ௩

வேந்தர்வீதியின்பெயர்.

பூரியம். (௧)

முடுக்குத்தெருவின்பெயர்

கோணம். (௧)

முச்சந்தியின்பெயர்.

அந்தி. (௧)

சந்தியின்பெயர்.

அந்தி-கவலை-வரி. ஆ ௩.

நாற்சந்தியின்பெயர்.

சதுக்கம். (௧)

சிறோணியின்பெயர்.

சேடி-வாடை. ௨.

மற்றுஞ்சிறோணியின்பெயர்.

ஆவிடம். (௧)

ஆ ௩.

அக்கசாலையர்வீதியின்பெயர்

ஆவேசநம். (௧)

வேடர்வீதியின்பெயர்.

பக்கணம். (௧)

சந்தின்பெயர்.

சதுக்கம். (௧)

கோயிலின்பெயர்.

சிநகரம்-சேதிமம்-தேவாலயம்-நிலயம்-பாழி-பள்ளி-

நி

சூத்திரம்.

மந்திரமாலயந்தேவகுலங்கோ
ட்டம், நகர்தளிவானவருறையுள்
கோயில்.

(௱௪௯) சூ.

சத்திரஞ்சாலை யறச்சாலையா
கும்.

(௱௫௰) சூ.

அறப்புறமோதம்பள்ளியா
கும்.

(௱௫௧) சூ.

சமித்தமோமமண்டபஞ்சா
ரும்.

(௱௫௨) சூ.

சாலைமாளிகைபவநங்கோயி
ல், குலமுமன்னரில்லாகக்கூறுவ
[ர்.

(௱௫௩) சூ.

கந்தவாரமுமுவளகமுமந்த
ப்புரமுந்தேவியர்மனையாகு
மென்ப.

(௱௫௪) சூ.

மாடமனையுறையுள்புக்கில்ப
திவசதி, யிடமேபாத்தி யகம்வ
யினில்ல, மிடவகை சேர்வுவீ
டென்றிசைப்பர்.

(௱௫௫) சூ.

கூரை குரம்பை குடில்சிற்றி
லாகும்.

(௱௫௬) சூ.

புனைகலனிருக்கை பண்டசா
[லை.

(௱௫௭) சூ.

வளவியிறையேவீட்டிறப்
பாகும்.]



பெயர்ப்பிரிவு.

நிகேதநம்-மந்திரம்-ஆலயம்-
தேவகுலம்-கோட்டம்- நகர்-
தளி-வானவருறையுள். ஆ ௰௪

அறச்சாலையின்பெயர்.
சத்திரம்-சாலை. ஆ ௨.

ஓதும்பள்ளியின்பெயர்.
அறப்புறம். (௧)

ஓமமண்டபத்தின்பெயர்.
சமித்தம். (௧)

மன்னரில்லின்பெயர்.
சாலை-மாளிகை-பவநம்.
கோயில்-குலம். ஆ ௫.

மன்னன்றேவியிருக்கையின்
பெயர்.
கந்தவாரம்-உவளகம்-அந்
தப்புரம். ஆ ௩.

வீட்டின்பெயர்.
மாடம்-மனை-உறையுள்-பு
க்கில்-பதி-வசதி-இடம்-பாத்
தி-அகம்-வயின்-இல்லம்-இட
வகை-சேர்வு. ஆ ௰௩.

சிற்றிலின்பெயர்.
கூரை-குரம்பை-குடில்.
ஆ ௩.

பண்டசாலையின்பெயர்.
புனைகலனிருக்கை. (௧)

வீட்டிறப்பின்பெயர்.
வளவி-இறை. ஆ ௨.





சூத்திரம்.

(௱௫௮) ———

சோபாநந்தாழ்வாரமாகும்.

(௱௫௯) சூ.

விடங்கமுகட்டே.

(௱௬௰) சூ.

வேயுள்வேய்தல்.

(௱௬௧) சூ.

சாலகஞ்சாளரநாழைசாலே
கம்,வாதாயநம்பல்கணியென
ப்படுமே.

(௱௬௨) சூ

அட்டிலடுக்களை மடைப்பள்
ளியாகும்.

(௱௬௩) சூ.

கல்விபூரிகல்லூரியாகும்.

(௱௬௪) சூ.

பித்திகைசுவர்த்தலம்.

(௱௬௫) சூ.

பீடிகைபீடம்.

(௱௬௬) சூ.

அங்கணந்தூம்புவாய்சலதா
ரையாகும்.

(௱௬௭) சூ.

முன்றிலங்கணமுற்றமாகும்.

(௱௬௮) சூ.

ஆமியநிலாமுற்றமாகுமெ
[ன்ப.

(௱௬௯) சூ.

திட்டைமண்ணீடுதெற்றிவே
திகை, திண்ணையாகுமென்மனா
ர்புலவர்.

பெயர்ப்பிரிவு.

தாழ்வாரத்தின்பெயர்.
சோபாநம். (௧)

முகட்டின்பெயர்.
விடங்கம். (௧)

வேயுளின்பெயர்.
வேய்தல். (௧)

பல்கணியின்பெயர்.
சாலகம்-சாளரம்-நாழை-
சாலேகம்-வாதாயநம். ஆ ௫.

மடைப்பள்ளியின்பெயர்.
அட்டில்-அடுக்களை. ஆ ௨.

கல்விபூரி-அன்றிக்கல்விபயிலி
டத்தின்பெயர்.
கல்லூரி. (௧)

சுவர்த்தலத்தின்பெயர்.
பித்திகை. (௧)

பீடத்தின்பெயர்.
பீடிகை. (௧)

சலதாரையின்பெயர்.
அங்கணம்-தூம்புவாய்.
ஆ ௨.

முற்றத்தின்பெயர்.
முன்றில்-அங்கணம் ஆ ௨.

நிலாமுற்றத்தின்பெயர்.
ஆமியம். (௧)

திண்ணையின்பெயர்.
திட்டை-மண்ணீடு-தெற்றி-
வேதிகை. ஆ ௪.

## சூத்திரம்.

(௱௭௰)
கற்படுத்தபூமிகுட்டிமமாகு
[ம்.

(௱௭௧) சூ.
தெற்றியம்பலஞ் சித்திரகூ
டம்.

(௱௭௨) சூ.
பொதியிலு மன்றமும் பொ
துவுமம்பலம்.

(௱௭௩) சூ.
செல்ல நீர்க்கும் பல்புகழ்ச்
சேந்தனில், வல்லு நர் நாவலர்
வாய்ந்தவிடமு,மல்லுஞ்சூதும்
படையுமற் றுங், கல்வியயில் க
ளமுங்கழகமாகும்.

(௱௭௪) சூ.
ஆசிருக்கைப் பெயரத் தா
ணி,வேத்தவை.

(௱௭௫) சூ.
போரி னிடமும் வட்டாடிட
மு, மாடலிடமுமவையு மரங்க
[ம்.

(௱௭௬) சூ.
ஒ்ருசிறை துச்சில்.

(௱௭௭) சூ.
ஒ்ருவந்தமேகாந்தங் கொட்
டில்வேறிடம்.

(௱௭௮) சூ.
சுருங்கைகந்படையாகுமெ
ன்ப.

(௱௭௯) சூ.
ஆகரம்பிறப்பிட முறைவிட
மாகும்.

கு

## பெயர்ப்பிரிவு.

கற்படுத்தபூமியின்பெயர்.
குட்டிமம். (க)

சித்திரகூடத்தின்பெயர்.
தெற்றியம்பலம். (க)

அம்பலத்தின்பெயர்.
பொதியில் - மன்றம் - பொ
து. ஆ ௩.

கழகமெனும்பெயர்.
வல்லுநருநாவலருஞ்சேரிட
த்திற்கு மல்லுஞ்சூதும் படை
யுங் கல்வியும் பயிலிடத்திற்கு
முரித்து.

ஆசிருக்கையின்பெயர்.
அத்தாணி - வேத்தவை.
ஆ உ.

அரங்கமெனும்பெயர்.
போரினிடத்திற்கும் - வட்
டாடிடத்திற்கும் - ஆடலிடத்தி
ற்கும் - அவைக்குமுரித்து.

ஒ்ருசிறை - அல்லது - ஒ்துக்கிட
த்தின்பெயர்.
துச்சில். (க)

ஏகாந்தத்தின்பெயர்.
ஒ்ருவந்தம் - வேறிடம் - கொட்
டில். ஆ ௩.

கந்படையின்பெயர்.
சுருங்கை. (க)

உறைவிடத்தின்பெயர்.
ஆகரம் - பிறப்பிடம். ஆ உ.

கு



## சூத்திரம்.

(௱௮௰)
குமுதஞ் சுல்லிகாமரமடுப்பு,
முத்தாநமெனவுமொழியப்ப
டுமே.

(௱௮௧) சூ.
கூடம்பை பஞ்சரங்கட்சிகூ
டாகும்.

(௱௮௨) சூ.
குலாயநம்பஞ்சரம்பண்ணு
ங்கூடே.

(௱௮௩) சூ.
மந்திரஞ்சாலை குதிரைப்பந்தி.

(௱௮௪) சூ.
நீடியவாரியுஞ் சேவகமுந்த
ண்டமுங் , கூடமு மோளியும்
யானைசேர்விடம்.

(௱௮௫) சூ.
தண்டம்யானைசெல்வழியெ
ன்ப.

(௱௮௬) சூ.
சேவகம் யானைத் துயிலிட
மாகும்.

(௱௮௭) சூ.
கட்சியமளிசேக்கையுறைய
ள்,சட்டகஞ் சேர் விடம்பள்ளி
சயநம், பட்டம்பாழிபாயலரி
துயிலிட , மொட்டிய வுயர்தி
ணைக்கிடப்பிடமாகும்.

(௱௮௮) சூ.
பட்டம்போத்துப் பண்ணை
சேக்கை விலங்கு துயிலு மிட
மாகும்மே.

வே

## பெயர்ப்பிரிவு.

அடுப்பின்பெயர்.
குமுதம் - சுல்லி - காமரம் -
முத்தாநம். ஆ ச.

கூட்டின்பெயர்.
கூடம்பை - பஞ்சரம் - கட்சி.
ஆ ௩.

பண்ணுங்கூட்டின்பெயர்.
குலாயநம் - பஞ்சரம். ஆ உ.

குதிரைப்பந்தியின்பெயர்.
மந்திரம் - சாலை. ஆ உ.

யானைசேர்விடத்தின்பெயர்.
வாரி - சேவகம் - தண்டம் - கூ
டம் - ஓளி. ஆ ரு.

யானைசெல்வழியின்பெயர்.
தண்டம். (க)

யானைத்துயிலிடத்தின்பெயர்.
சேவகம். (க)

மக்கட்கிடப்பிடத்தின்பெயர்.
கட்சி - அமளி - சேக்கை - உ
றையுள் - சட்டகம் - சேர்விடம் -
பள்ளி - சயநம் - பட்டம் - பாழி -
பாயல் - அரி - துயிலிடம்.
ஆ ௰௩.

விலங்குதுயிலிடத்தின் பெயர்.
பட்டம் - போத்து - பண்ணை
சேக்கை. ஆ ச.

வே

சூத்திரம்.

(௱௮௯) ———

வேதியு நித்தமும் வேள்விக் குண்டம்.

(௱௯௰) சூ.

தாபதம்பாழி கரண்டைபள்ளி, முநிவர்வாசமெனமொழியப்படுமே.

(௱௯௧) சூ.

சுள்ளையுஞ்சூளையு மட்கலஞ் சுடுமிடம்.

(௱௯௨) சூ.

சுடுகாடீமமயாநஞ்சுடலை, சுடுநிலம்புறங்காடிடுகாடுமுதுகாடு, வநமெரி வநம்பிதிர் வநம்பிணக்காடே.

(௱௯௩) சூ.

களரிபறந்தலை செம்புலம் படுகளம், பொருகளங் களமெனப்புகன்றனர்புலவர்.

(௱௯௪) சூ.

அருப்ப மாரிடமஞரிழுக்கு வழுக்குநிலம்.

(௱௯௫) சூ.

தொழுவமாவேலிதோழமானிலையே.

(௱௯௬) சூ.

இஞ்சிநொச்சியெயில்சுற்றுப்புரிசை, பந்தம்வரைப்புக் காப்பாண்காவலாரலோதைபிராகாரம்வேலி, சீர்சாலம் வேணகைமதிலெனச்செப்புவர்.

(௱௯௭) சூ.

வன்சிறையுவளசமாகலும்வ ணாயார்.] ப

பெயர்ப்பிரிவு.

வேள்விக்குண்டத்தின்பெயர்.

வேதி-நித்தம். ஆக ௨.

முநிவர்வாசத்தின்பெயர்.

தாபதம்-பாழி-கரண்டை-பள்ளி. ஆக ௪.

மட்கலஞ்சுடுமிடத்தின்பெயர்.

சுள்ளை-சூளை. ஆக ௨.

சுடுகாட்டின்பெயர்.

ஈமம்-மயாநம்-சுடலை-சுடுநிலம்-புறங்காடு-இடுகாடு-முதுகாடு-வநம்-எரிவநம்-பிதிர்வநம்-பிணக்காடு. ஆக ௰௧.

பொருகளத்தின்பெயர்.

களரி-பறந்தலை-செம்புலம்-படுகளம்-களம். ஆக ௫.

வழுக்குநிலத்தின்பெயர்.

அருப்பம்-ஆரிடம்-அஞர்-இழுக்கு. ஆக ௪.

தொழுவத்தின்பெயர்.

ஆவேலி-தோழம்-ஆனிலை. ஆக ௩.

மதிலின்பெயர்.

இஞ்சி-நொச்சி-எயில்-சுற்று-புரிசை-பந்தம்-வரைப்பு-காப்பு-ஆண்-காவல்-ஆரல்-ஓதை-பிராகாரம்-வேலி-சாலம்-வேணகை. ௰௬.

மற்றுமதிலின்பெயர்.

வன்சிறை-உவளகம். ௨.

ஆக ௰௮.



சூத்திரம்.

(௱௯௮) ———

பரிகமகப்பாப் பதணமென்று, முரியமதிலுளுயர்மேடைக்கே.

(௱௯௯) சூ.

தொடையுந்தகைப்பும் வாரியுஞ்சுற்றே.

(௨௱) சூ.

பதப்பாடெந்திரங் கோசந்தோணி, விதப்புஞாயிறுஞ் சின்மதிலுறுப்பே.

(௨௱௧) சூ.

அகழிகிடங்ககப்பாப்பரிகமகமே.

(௨௱௨) சூ.

புகல்குதிராகும்.

(௨௱௩) சூ.

தோட்டிதுவாரம்வாரிகடை வாயில்.

(௨௱௪) சூ.

சிகரிகோபுரம்.

(௨௱௫) சூ.

கோபுரமென்பது பெருவாயிலாகும்.

(௨௱௬) சூ.

புதவுவாயிற் புகுபெரும் புழையே.

(௨௱௭) சூ.

அளிந்த மவ்வழிச்சார்திண்ணையாகும்.

(௨௱௮) சூ.

அத்திநகம்வாயிற்படிச்சுருளாகும்.

பெயர்ப்பிரிவு.

மதிலுளுயர்மேடையின்பெயர்.

பரிகம்-அகப்பா-பதணம். ஆக ௩.

மதிற்சுற்றின்பெயர்.

தொடை-தகைப்பு-வாரி. ஆக ௩.

மதிலுறுப்பின்பெயர்.

பதப்பாடு-எந்திரம்-கோசம்-தோணி-விதப்பு-ஞாயில்-நாஞ்சில். ஆக ௭.

அகழின்பெயர்.

அகழி-கிடங்கு-அகப்பா-பரிகம். ஆக ௪.

குதிரின்பெயர்.

புகல். (௧)

வாயிலின்பெயர்.

தோட்டி-துவாரம்-வாரி-கடை. ஆக ௪.

கோபுரம்-அல்லது கோபுரநிலையின்பெயர்.

சிகரி. (௧)

பெருவாயிலின்பெயர்.

கோபுரம். (௧)

கோபுரவாயிலிற்புகுபுழையின்பெயர்.

புதவு. (௧)

கோபுரவாயிற்றிண்ணையின்பெயர்.

அளிந்தம். (௧)

கோபுரவாயிற்படிச்சுருளின்பெயர்.

அத்திநகம். (௧)

சூத்திரம்.

(௨௱௯) ——

விளையுளும் பண்ணையுஞ்செய்யுங்கழனியுந், தடியும்பாத்தியுஞ்செறுவும்வயலே.

(௨௱௰) சூ.

குண்டில்பாத்திசிறுசெய்யாகும்.

(௨௱௧௧) சூ

குறிஞ்சிநிலச்சார் புங்கொல்லையும்புனமே.

(௨௱௧௨) சூ.

ஏனலும்வளாக முந்தினைப்புனமென்ப.

(௨௱௧௩) சூ.

முதைப்புனம் பழைங் கொல்லை.

(௨௱௧௪) சூ.

இதைப்புனம்புதுக்கொல்லை.

(௨௱௧௫) சூ.

தோட்டந்திடவைபடப்பையிம்மூன்றுந், தோட்டப்பெயரெனச் சொல்லினர்புலவர்.

(௨௱௧௬) சூ.

துடவை தொய்யி லுழவின் பெயரே.

(௨௱௧௭) சூ.

தொடுப்பேயுழுவோர்தொழில்வளைப்பாகும்.

(௨௱௧௮) சூ.

மரிசிபுதுவரம்பு.

(௨௱௧௯) சூ.

வன்மீகம்புற்று.

பெயர்ப்பிரிவு.

வயலின்பெயர்.

விளையுள் - பண்ணை - செய் - கழனி - தடி - பாத்தி - செறு. ஆ ௭.

சிறுசெய்யின்பெயர்.

குண்டில் - பாத்தி. ஆ ௨.

புனத்தின்பெயர்.

குறிஞ்சிநிலச்சார்பு - கொல்லை. ஆ ௨.

தினைப்புனத்தின்பெயர்.

ஏனல் - வளாகம். ஆ ௨.

பழைங்கொல்லையின்பெயர்.

முதைப்புனம். (௧)

புதுக்கொல்லையின்பெயர்.

இதைப்புனம். (௧)

தோட்டத்தின்பெயர்.

தோட்டம் - திடவை - படப்பை. ஆ ௩.

உழவின்பெயர்.

துடவை - தொய்யில். ஆ ௨.

உழுதொழில்வளைப்பின் பெயர்.

தொடுப்பு. (௧)

புதுவரம்பின்பெயர்.

மரிசி. (௧)

புற்றின்பெயர்.

வன்மீகம். (௧)





சூத்திரம்.

(௨௨௰) ——

கங்குவரம்பருகே.

(௨௨௧) சூ.

உவளகம்பயம்பேயவல் குழிதாழ்வே,யிழிவுகிழக்குப்படுகர்பள்ளம்.

(௨௨௨) சூ.

குரும்பிபுற்றஞ்சோறே.

(௨௨௩) சூ.

களரிகரம்பே பெரும்பாழ் முதுநிலம்.

(௨௨௪) சூ.

சரிநெறியொழுக்கந் தாரையாறு, வதியதர்மார்க்கமியவை நடவை, பதவைசெப்பமயநமிடவை, வாரிவட்டைவரிவயவை வகுந்து, செலவுசிறுபதம் வழிக்கிளவியாகும்.

(௨௨௫) சூ.

அத்தங்கடங்கடறு தூம்புசுரமருநெறி.

(௨௨௬) சூ.

கவலைகவர்த்த நெறியெனக் கருதுவர்.

(௨௨௭) சூ.

விடங்கர் சிறுவழி யாகுமென்ப.

(௨௨௮) சூ.

*பாதைபெருவழி.

(௨௨௯) சூ.

படுகர்மடுவிழிந் தேறப்படுநெறி.

பெயர்ப்பிரிவு.

வரம்பருகின்பெயர்.

கங்கு. (௧)

பள்ளத்தின்பெயர்

உவளகம் - பயம்பு - அவல் - குழி - தாழ்வு - இழிவு - கிழக்கு - படுகர். ஆ ௮.

புற்றஞ்சோற்றின்பெயர்.

குரும்பி. (௧)

முதுநிலத்தின்பெயர்.

களரி - கரம்பு - பெரும்பாழ். ஆ ௩.

வழியின்பெயர்.

சரி - நெறி - ஒழுக்கம் - தாரை - ஆறு - வதி - அதர் - மார்க்கம் - இயவை - நடவை - பதவை - செப்பம் - அயநம் - இடவை - வாரி - வட்டை - வரி - வயவை - வகுந்து - செலவு - சிறுபதம். ஆ ௨௧.

அருநெறியின்பெயர்.

அத்தம் - கடம் - கடறு - தூம்பு - சுரம். ஆ ௫.

கவர்த்தநெறியின்பெயர்.

கவலை. (௧)

சிறுவழியின்பெயர்.

விடங்கர். (௧)

பெருவழியின்பெயர்.

பாதை. (௧)

இழிந்தேறப்படுவழியின் பெயர்.

படுகர் - மடு. ஆ ௨.

சூத்திரம்.

(௨௩௰) ———

ஆரோகணஞ்சோபாநங்க
ற்படி.

(௨௩௧) சூ.

அளக்கர்நீள்வழியே.

(௨௩௨) சூ.

வாய்புலம்பாங்கர் வயின்கள
ம்வைப்புத், தேயம்வழியுழி தி
ணையேமருங்கு, பானிலந் தல
மேவளாகம்பட்டி, சூழறுநடமி
டப்பெயர்த்தொடர்பே.

(௨௩௩) சூ.

கண்கால்புறமக முள்ளுழை
கீழ்மேல், பின்சாரயல்புடை
தேவகையெனு அ, முன்னிடை
கடைதலை வலமிடமெனு அ, அ
ன்ன பிறவுமதன்பா லவென்ம
ஞர்.

(௨௩௪) சூ.

மாடுசிறையுழிமருங்குஞாங்
கர்முன், பால்புடைபாங்கர்பக்
கமாகும்.

(௨௩௫) சூ.

நனந்தலை நாப்பண் மத்திம
நள்ளு,வயங்கிடை யொத்த நு
வோடணவு,நலந்திகழ்கூழையு
நடுவென்றாகும்.

(௨௩௬) சூ.

உம்பர்மீப்புலம்வலமே *யோ
க்கத், துங்கமுவணம் பருமமுந்
தி,மேடுமோடு தூக்கு மேக்கு,
நிவப்பிவையுயர்ச்சியாக நிகழ்
த்துவர்.] ஞா

பெயர்ப்பிரிவு.

கற்படியின்பெயர்.

ஆரோகணம்- சோபாநம். ஆ. ௨.

நீள்வழியின்பெயர்.

அளக்கர். (௧)

இடத்தின்பெயர்.

வாய்-புலம்-பாங்கர்-வயின்-
களம்-வைப்பு - தேயம்-வழி-
உழி-திணை-மருங்கு-பால்-நில
ம்- தலம்-வளாகம்-பட்டி- சூழ
ல்-தாநம். ௰அ.

மற்றுமிடப்பொதுப்பெயர்.

கண்-கால்-புறம்-அகம்- உ
ள்-உழை-கீழ்-மேல்-பின்-சா
ர்-அயல்-புடை- + தேவகை-
முன்-இடை-கடை-தலை- வல
ம்-இடம். ௰௯.

ஆ. ௩௭.

பக்கத்தின்பெயர்.

மாடு-சிறை-உழி-மருங்கு-
ஞாங்கர்-முன்- பால் - புடை-
பாங்கர். ஆ. ௯.

நடுவின்பெயர்.

நனந்தலை-நாப்பண்- மத்தி
மம்-நள்-இடை- ஒத்தல்-நா-
அணவு-கூழை. ஆ. ௯.

உயர்ச்சியின்பெயர்.

உம்பர்- மீப்புலம் - வலம்-
ஒக்கம்- துங்கம்-உவணம்-பரு
மம்-உந்தி-மேடு-மோடு- தூக்
கு-மேக்கு-நிவப்பு. ஆ. ௰௩. ஞா

*ஊக்கம்-என்பதூஉம்பாடம்.]

+தேவகை-என்பதுதிசைக்கூறு.



சூத்திரம்.

(௨௩௭) ———

ஞாங்கர்முன்னுமேலுமாகு
[ம்.

(௨௩௮) சூ.

முதலுந்தலைத்தாளு முன்ன
ராகும்.

(௨௩௯) சூ.

இம்பரிவணே.

(௨௪௰) சூ.

உம்பருவணே.

(௨௪௧) சூ.

ஆண்டவ்விடம்.

(௨௪௨) சூ.

ஈண்டிவ்விடம்.

(௨௪௩) சூ.

எல்லைகுரோசங்கூப்பிடுதூர
[ம்.

(௨௪௪) சூ.

கிரவுஞ் சங்கோழிப் பறவை
யளவாகும்.

(௨௪௫) சூ.

புகையோசனையாம்.

(௨௪௬) சூ.

காவதங்காதமாகக்கருதுவர்

பெயர்ப்பிரிவு.

ஞாங்கரெனும்பெயர்.

முன்னிடத்திற்கு மேலிடத்
திற்குமுரித்து.

முன்னரின்பெயர்.

முதல்-தலைத்தாள். ஆ. ௨.

இம்பரெனும்பெயர்.

இவணென்பதற்குரித்து.

உம்பரெனும்பெயர்.

உவணென்பதற்குரித்து.

ஆண்டெனும்பெயர்.

அவ்விடத்திற்குரித்து.

ஈண்டெனும்பெயர்.

இவ்விடத்திற்குரித்து.

கூப்பிடுதூரத்தின்பெயர்.

எல்லை-குரோசம். ஆ. ௨.

கோழிப்பறவையளவின்பெய
கிரவுஞ்சம். (௧)] [ர்.

யோசனைதூரத்தின்பெயர்.

புகை. (௧)

காதத்தின்பெயர்.

காவதம். (௧)

திவாகரவரலாற்றின்பெயர்.

ஒருவற்கொருவ னாகியுதவியும், பரிசின்மாக்கள்
பற்பலராயினுந், தானொருவன்னே தரணிமாநவன்
செந்தமிழ்ச்சேந்தன், றெரிந்ததிவாகரத், தைந்தா
வதிடப்பெயர்த்தொகுதி.

முற்றிற்று.